2026 ஆகஸ்ட் மாதம் 25– ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 32/2021

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25– ஆம் தேதி செவ்வாய்கிழமை திரு.P.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW21 (LW27) – சிவராஜா |
| தகப்பனார் பெயர்: | சின்னச்சாமி |
| ஊர்: | தேவதானப்பட்டி |
| வட்டம்: | பெரியகுளம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இரண்டாம்நிலை காவலர் 419, தேவதானப்பட்டி காவல்நிலையம் |
| வயது : | 35 |

25.08.2026

(1, 2, 9 எதிரிகள் ஆஜர். 3, 4, 5, 6, 7, 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவரலாக பணியாற்றி வருகிறேன். கடந்த 29.02.2020ம் தேதி கடமலைக்குண்டு காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணியிலிருந்தபோது, அன்றைய தேதி மதியம் 02.00 மணியளவில் கடமலைக்குண்டு காவல்நிலைய குற்ற எண்.50/2020–ல், 5 முதல் தகவல் அறிக்கை நகல்களையும் பெற்று, ஆண்டிபட்டி, கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அவர்களிடமும், இரண்டாவது தேனி, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்

அவர்களுக்கும், மூன்றாவது ஆண்டிபட்டி காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கும், நான்காவது மாவட்ட குற்றப் பதிவேடு அலுவலகத்திற்கும், ஐந்தாவது திண்டுக்கல் சரக காவல்துறை துணைத்தலைவர் அவர்களுக்கும் தபாலை ஒப்படைத்து, காவல் ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2, 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

ஆய்வாளர் கொடுத்த கடவுச்சீட்டு பெற்று, நீதிமன்றத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். கடமலைக்குண்டு காவல்நிலையத்திற்கும், ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 25 கி.மீ முதல் 30 கி.மீ தூரம் இருக்கும். அடிக்கடி பேருந்து போக்குவரத்து இருக்கும் என்றால் தேனிக்கு பேருந்து உண்டு, ஆண்டிபட்டிக்கு இல்லை. தேனிக்கும் ஆண்டிபட்டிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் சுமார் 15 கி.மீ. தூரம் இருக்கும். கடமலைக்குண்டிலிருந்து ஆண்டிபட்டிக்கு வரவேண்டும் என்றால் கண்டமனூர் க.விலக்கு வழியாக வரவேண்டும் என்றால் சரிதான். கடமலைக்குண்டிலிருந்து க.விலக்கிற்கு அடிக்கடி பேருந்து வசதி உண்டு என்றால் உண்டு. க.விலக்கிற்கும் ஆண்டிபட்டிக்கும் ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் பேருந்து உண்டு என்றால் கணக்கு சொல்ல இயலாது, அடிக்கடி பேருந்து போக்குவரத்து உள்ளது. நான் சொன்ன தேதி, நேரத்தில் நான் சொன்ன ஆவணங்கள் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கடவுச்சீட்டு நீதித்துறை நடுவரிடம் கையொப்பம் பெற்று ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரிதான்.

**<u>3 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1, 2, 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 3 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பில் அப்படியே ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.08.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.25 18:29:14 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.08.2026